உள்ளன் முக அமைப்பிற்கேற்ப
முக்குக்கண்ணாடிகளை
தாமதமின்றி பெற்றுக்கொள்ள
X. B. MORAIS
(Qualified Optician)
50, Clock Tower Road,
JAFFNA.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ-1/=

அதி சிறந்த
நவீன முறையில்
உங்கள்
பற்களைக் கட்டுவதற்கு
MORAIS DENTAL LAB
(Opposite
Wellington Theatre)
50, Clock Tower Road,
JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹூ மார்கழி மீ 12 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 14 (27-12-1985) UTHAYAN –A LIVELY TAMIL DAILY கதிர்:- 31

★ வடக்கு, கிழக்கு வரும்

# உணவு, மருந்து லொறிகளை படைகள் சோதனையிடும்

## கடும் கண்காணிப்பு நடத்த மேலிடம் விசேஷ உத்தரவு

கொழும்பு, டிச. 27

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு உணவுப் பொருள், மருந்து மற்றும் பாவனைப் பொருள்களை ஏற்றிவரும் தனியார் லொறிகள், இனிமேல் வழியில் வைத்து பாதுகாப்புப் படையினரால் சோதனையிடப்படும்.

அவற்றைக் கடுமையாகக் கண்காணிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு மேலிடம் உத்தரவிட்டுள்ளது.

யாருக்கு, எங்கு பொருள்கள் கொண்டு போகப்படுகின்றன? இந்தக் கேள்விக்கு சரியான, திருப்திகரமான பதில் கொடுக்கத் தவறினால்–

✶ லொறிகள் மற்றும் வாகனங்கள் பறிமுதலாகும்.

✶ சாரதி, கிளீனர், உரிமையாளர்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்

இதற்கான உத்தரவுகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆயுதப் படையினருக்கு மேலிடத்தினால் வழங்கப்பட்டுள்ளன என்று நம்பிக்கையாக அறியப்படுகிறது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள போராளிகளுக்கு, உணவு, மருந்து மற்றும் பொருள்கள் கொழும்பில் இருந்தும், வேறு இடங்களில் இருந்தும் லொறி மற்றும் வாகனங்களில் கொண்டுசெல்லப்படுகின்றன என்று பாதுகாப்பு அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

அதைத் தொடர்ந்து தான் இப்புதிய நடவடிக்கை என்று இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடை முகாம்களில் உள்ள ஆயுதப்படையினரும் ரோந்து சேவையில் ஈடுபடும் ஆயுதப்படையினரும் இனிமேல் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு வரும் லொறி, மற்றும் வாகனங்கள் மீது கடும் சோதனைகளை மேற்கொள்வர் என்று தெரிகின்றது.

போராளிகளுக்குரிய பொருள்களை சில தனியார் நிறுவனங்கள் தங்கள் களஞ்சியங்களில் சேமித்து வைத்து உதவுகின்றன என்ற தகவலும் பாதுகாப்பு வட்டாரங்களுக்குக் கிடைத்துள்ளதாம்.

பொருள்களைச் சேமித்து வைக்க இடவசதி இல்லாத காரணத்தினால் தான் தனியார் நிறுவனங்களின் உதவியை போராளிகள் நாடியுள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

## ரஜ்னீஷ் சுவாமி திரிசங்கு சொர்க்கத்தில்!

### இந்தியாவிலிருந்தும் நாடுகடத்தல்

புதுடில்லி, டிச. 26

பிரச்சினைக்குரிய ரஜ்னீஷ் சுவாமி, இந்தியாவில் இருந்தும் நாடு கடத்தப்பட்டார்.

சுவாமியுடன் அவரின் 10 சீடர்களும் நாடு கடத்தப்பட்டனர்.

நான்கு ஆண்டுகள் அமெரிக்காவில் அன்ரிலோப் என்னுமிடத்தில் ஆச்சிரமம் அமைத்து வசித்து வந்த ரஜ்னீஷ் சுவாமி, அண்மையில் தான் அமெரிக்காவில் இருந்து வெளியேறினார்.

தனது சீடர்கள் மத்தியில் போலித் திருமணங்களைச் செய்ததன் மூலம் அமெரிக்கக் குடியகல்வுச் சட்டத்தை மீறிய குற்றத்தை அவர் ஏற்றுக்கொண்ட பின்னரே அமெரிக்காவை விட்டு வெளியேறி இந்தியாவுக்கு வந்தார்.

அவரின் தற்காலிக விஸா முடிவடைந்துவிட்டதால் இப்பொழுது இந்தியாவும் அவரை நாடுகடத்தியுள்ளது.

இமாலயப் பிரதேசத்தில் தற்போது வசித்து வருகின்றார், ரஜ்னீஷ் சுவாமி.

இந்தியாவின் நாடு கடத்தல் உத்தரவைத் தொடர்ந்து ரஜ்னீஷ் சுவாமி இன்று 'திரிசங்கு சொர்க்கத்தில்!'

## வடக்கே வந்த தனியார் பஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது

–நல்லூர் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம்–

நல்லூர், டிச. 27

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பஸ்ஸுக்கு துப்பாக்கிச் சூடு. ஒருவர் காயம்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

கடந்த 24ஆம் திகதி இரவு 44 பயணிகளுடன் பிரஸ்தாப தனியார் பஸ் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தது. சிலாபத்துக்கும் புத்தளத்துக்கும் இடையில் ஆயுத முனையில் பஸ் மறிக்கப்பட்டது.

பஸ்ஸின் சாரதி பஸ்ஸை நிறுத்தாமல் அதிவேகமாக செலுத்திச் சென்றார். இதனை ஆத்திரம் அடைந்த ஆயுதக் கோஷ்டியினர் பஸ்ஸை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

பஸ்ஸில் இருந்த இருபாலையைச் சேர்ந்த என். கந்தசாமி என்பவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டது.

பஸ்ஸின் முன் கண்ணாடி துப்பாக்கிச் சூட்டினால் உடைந்து நொறுங்கியது.

சம்பவம் பற்றி திரு. கந்தசாமி உதயன் நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:-

சூட்டுக் காயத்துடன் எமது பஸ் பயணத்தைத் தொடர்ந்தது. பின்னர் வழியில் மறிப்புச் சோதனையில் ஈடுபட்ட பொலீஸாருக்கு விவரம் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் ஜீப் முன்னால் செல்ல பஸ்ஸில் என்னை ஏற்றிக்கொண்டு சிலாபம் ஆஸ்பத்திரிக்குச் சென்றனர்.

அங்கு எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் 25ஆம் திகதி இரவு நாம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### முரசுமோட்டை முற்றுகை

யாழ்ப்பாணம், டிச' 27

ஆயுதப்படையினரைக் கண்டதும் பஸ்ஸில் இருந்து தப்பி ஓடிய இரண்டு பேரில் ஒருவர் பிடிபட்டார்.

மற்ற நபர் தப்பி விட்டார்.

இச்சம்பவம் முரசுமோட்டையில் இடம்பெற்றது. கைது செய்யப்பட்ட நபரையும் அழைத்துக் கொண்டு ஆயுதப்படையினர் முரசுமோட்டையைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

வீடு வீடாகச் சோதனை இட்டு இறுதியில் 5 பேரை விசாரணைக்காக ஆயுதப்படையினர் அழைத்துச் சென்றனர்.

### 2 ஜீப்புகள் குண்டினால் சேதம்

மட்டக்களப்பு, டிச. 27

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஆயுதப்படையினருக்குச் சொந்தமான 2 ஜீப்புகள் இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்து சேதமாக்கப்பட்டன.

இரு ஜீப்புகளும் திருத்த வேலைகளுக்காக கராஜ் ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த சமயம் இச்சம்பவம் நடந்தது.

## மலையகத் தமிழர் பிரச்சினை இனப்பிரச்சினையுடன்சம்பந்தம்

### ஈரோஸ் அறிக்கை

சென்னை, டிச 26

மலையகத் தமிழரின் பிரச்சினை ஏனைய தமிழரின் இனப் பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்து உள்ளது.

இப்படி ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

செயல் இழந்து போன 198' சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை இந்தியா நிராகரித்தது சரியானது.

பிரதமர் ராஜீவ், மலையகத்தமிழர் நிலை குறித்து விடுத்த அறிக்கையை வரவேற்கின்றோம்.

இப்படி ஈழப் புரட்சி அமைப்பு கூறியது.

### 2 பெண்கள் உட்பட நால்வர் விடுதலை

திருகோணமலை, டிச. 27

திருமலை சென். மேரிஸ் மகளிர் கல்லூரியில் உள்ள அகதி முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்ட 23 பேரில் 2 பெண்கள் உட்பட நால்வர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 19 பேரும், ஆயுதப் படையினரால் பூஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

### உவர்மலையில் இளைஞர் கைது

திருகோணமலை, டிச. 27

திருமலை உவர்மலையில் ஆயுதப்படையினர் 23 வயது தமிழ் இளைஞன் ஒருவரைக் கைது செய்தனர்.

இளைஞனின் பெயர் மகேஸ்வரன். திருமலையில் உள்ள தேசிய நீர் விநியோக வடிகால் சபை அலுவலகத்தில் பணியாற்றி வருபவர்.

மூதூர், பட்டித்திடல் கிராமத்திலும் 3 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

இது பற்றி திருமலை பிரஜைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

### ஐவர் கதி தெரியவில்லை

திருகோணமலை, டிச. 27

திருமலை—கண்டி வீதியில் எரிக்கப்பட்ட லொறியின் சாரதி, கிளீனர் — அபயபுரத்தில் டாக்சியுடன் கடத்தப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர், ஒரு முஸ்லிம் — ஆகியோர் பற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

டாக்சியும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சிங்களவர் சுட்டுக் கொலை

## ஊர்காவல் வீரர் கைது; மற்றவரை தேடி வலைவிரிப்பு

திருகோணமலை, டிச.27

சிங்களவர் ஒருவரை சுட்டுக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக சிங்கள ஊர்காவல்படை வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றொரு வீரரைத் தேடி வலைவிரிக்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலை பதில் நீதிவான் திரு. இரா. சந்திரபாலனின் உத்தரவை அடுத்தே இந்த நடவடிக்கை.

கைது செய்யப்பட்ட சுனில் என்றநபரை எதிர்வரும் ஜனவரி 6–ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கும்படி பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

சுட்டுக் கொலை செய்யப்பட்டவர் ஏ ஜே கே. துங்க வயது 35. நான்கு பிள்ளைகளின் தந்தை.

கடந்த புதன்கிழமை நண்பகல் 11·30 மணிக்கு அவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இந்த மரணம் குறித்து விசாரணை நடத்திய பதில் நீதிவான் திரு. இரா. சந்திரபாலன் சுனில், தர்மவீர என்ற இரண்டு ஊர்காவல் படை வீரர்களைக் கைது செய்யும்படி உத்தரவிட்டிருந்தார்.

### பதற்றம்

அம்பாறை, டிச. 27

காரைதீவிலும், நிந்தவூரிலும் நேற்று பதற்றம் நிலவியது.

நிந்தவூரிலிருந்து காரைதீவிற்குச் சென்ற முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டதையடுத்தே பதற்றம் ஏற்பட்டது.

### சுபநேரம்

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6–28 முதல் 7–58 வரை

ராகுகாலம்:
10-58 முதல் 12-28 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஆருத்ரா தரிசனம்
திருவாதிரை விரதம்

## விடுதலை அமைப்புக்களின் தலைவர்களுக்கு சென்னையில் பாதுகாப்பு மேலும் பலம்

சென்னை, டிச 26

சென்னையில் உள்ள தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் அமைப்பின் பேச்சாளர் டாக்டர். ஏ. எஸ். பாலசிங்கத்தின் வீட்டுக்குக் குண்டு வீசப்பட்டது சம்பந்தமாக புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகவலை சென்னை பொலீஸ் கமிஷனர் திரு. டபிள்யூ ஐ. தேவாரம் வெளியிட்டார்.

இதனிடையில் சென்னையில் தங்கியுள்ள தமிழ்ஈழ விடுதலை அமைப்புக்களின் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலீஸ் கமிஷனர் சொன்னார்.

### முச்சந்தி முரளி



திரிசங்கு என்டு பூமிக்கும் சொர்க்கத்துக்கும் இடையில் திரிசங்கு சொர்க்கத்தை உண்டு பண்ணினதாகக் கதை. அதைப்போல ரஜ்னீஷுக்கும் அமெரிக்காவும் இல்லை, இந்தியாவும் இல்லை என்டு இமயமலைச் சொர்க்கம் கிடைத்திருக்குப் போலை!

### 2 போராளிகள் மரணம்

அக்கரைப்பற்று, டிச, 27

அம்பாறையில் உள்ள தடுப்புமுகாமில் காவலில் வைக்கப்பட்டு இருந்த இரண்டு போராளிகள் துப்பாக்கிச் சூடுதாக்கி மரணமானார்கள்.

இறந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

1. நாகசாமி தேவநாயகம்.
2. கணபதிப்பிள்ளை தேவராசா.

இவர்கள் ஈழப்புரட்சி மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும்- காவலில் இருந்து தப்பி ஓட முயற்சிக்கையில் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

## கைதாவோர் தலைவிதியை நிர்ணயிக்கும் முகமூடிகள்

மட்டக்களப்பு, டிச.27

மட்டக்களப்புப் பகுதியில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்படுபவர்களின் தலைவிதியை முடிவு செய்யும் பொறுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள முகமூடி மனிதர்களிடம்தான் தங்கியுள்ளது.

இத்தகவலை ஆயுதப் படை முகாம்களுக்கு விசாரணைக்குச்சென்று திரும்பிய பலரும் தெரிவிக்கின்றார்கள்.

அவர்கள் மேலும் தகவல் தெரிவிப்பதாவது:

முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் வரிசையாக நாம் அங்கு வைக்கப்பட்டிருக்கும் முகமூடி மனிதர்களிடம்தான் ஆஜர் செய்யப்படுகின்றோம்.

முகமூடிகளின் கண்கள் மட்டும்தான் சுவர் துவாரம் வழியாக தெரியும்.

முகமூடிகள் எக்க, தெக்க, துன என சிங்களத்தில் இலக்கங்களை குறிப்பிடும்.

முகமூடியினால் 3-ஆம் இலக்கம் குறிக்கப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுகிறார்கள். 2-ஆம் இலக்கம் குறிக்கப்பட்டவர்கள் சில நாட்கள் விசாரணையின் பின்பு விடுதலை செய்யப்படுகின்றனர்.

1–ஆம் இலக்கம் குறிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து காவலில் வைக்கப்படுகிறார்கள்.

மலையகத் தமிழரை

## விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பும் முடிவுக்கு கண்டனம்

### கூட்டணி அறிக்கை

சென்னை, டிச, 26

ஆயிரக்கணக்கான மலையகத் தமிழர்களை விமானமூலம் இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப இலங்கை அரசு முடிவு செய்துள்ளதை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

வியாழக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணி இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை விடுத்தது.

இலங்கையில் அமைதி நிலவும்வரை இலங்கையில் உள்ள இந்தியத் தமிழரை இந்தியா ஏற்றுக்கொள்ளாது என்று பிரதமர் ராஜீவ்காந்தி அறிவித்து இருப்பதையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வரவேற்றுள்ளது.

அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

இலங்கையின் தேசிய வருமானத்தில் 60 சதவிகிதம் வெளிநாட்டுச் செலாவணியைத் தேடித் தருபவர்கள் மலையகத் தமிழர்களே.

அவர்களை விமான மூலம் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப இலங்கை அரசு திடீர் என்று முடிவு செய்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவதையும் இலங்கை அரசு ஒத்திப் போட்டுள்ளது.

இவற்றை கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பது இந்தியாவின் கடமை

## பண்ருட்டி இராமச்சந்திரன் வலியுறுத்து

சென்னை, டிச, 26

இலங்கை இனப்பிரச்சினை மிக நெருக்கடியான நிலையை அடைந்து விட்டது. இதை இன்னும் இலங்கை அரசு தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. பிரச்சினையைத் தீர்த்து வைப்பது இந்தியாவின் கடமை

இப்படித் தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் சொன்னார்.

அகில இந்திய அரசியல் விஞ்ஞான சங்கத்தின் 44 ஆவது மாநாடு சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் அவர், 'பாரதமும் இலங்கைத் தமிழரும்'– என்னும் பொருள் பற்றிய கட்டுரையைச் சமர்ப்பித்துப் பேசினார். அவர் மேலும் சொன்னதாவது:-

அரசமைப்புச் சட்டத்தை இலங்கை அரசு அடிக்கடி திருத்துகின்றது.

இதுதான் இனப்பிரச்சினைக்கான சுமுக தீர்வுக்கு இடைஞ்சலாக உள்ளது.

இலங்கையில் நடக்கும் சம்பவங்களை இந்தியா புறக்கணிக்க முடியாது.

பிரச்சினை நமது இடத்துக்கு வந்துவிட்டது. இதைத் தடுத்து நிறுத்துவதுடன் மட்டும் இந்தியா நின்றுவிடக் கூடாது அண்டை நாட்டின் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதும் இந்தியாவின் கடமை.

பஞ்சாப், அஸாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதுபோல், இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் பிரதமர் ராஜீவ் காந்தி புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சிங்கள, மத வெறி உணர்வுகளுக்கு இடங்கொடுக்காத முறையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் இலங்கை அரசு விஞ்ஞான அணுகுமுறை ஒன்றை செயல்படுத்த வேண்டும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## 'முந்தானை முடிச்சு' புகழ் தீபாவின் இலட்சியம்!

''அந்தரங்கம்'' படத்தின் மூலம் தமிழில் நடிக்க ஆரம்பித்த தீபா, ''முந்தானை முடிச்சு'' படத்தின் மூலம் பிரபலமானவர்.

அவர் தனது இலட்சியம் குறித்து இங்கே கூறுகிறார்:

''ஒவ்வொரு கலைஞருக்கும் வாழ்க்கையில ஒரு இலட்சியம் இருந்தாக வேண்டும். பணம் சம்பாதிக்க வேண்டும், புகழ் பெற வேண்டும். இப்படி ஆசை இல்லாதவர்கள் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

ஆசையைப் பொறுத்தவரை நான் மட்டும் விதி விலக்கல்ல. என்றாலும் என்னுடைய ஆசை பணம், புகழ் இத்துடன் முடிவடையப்போவதில்லை. பணம் இருந்தால் இந்த உலகில் பலரை விலைக்கே வாங்கலாம். ஆனால் நான் விரும்புவது சாதனையாளர் என்ற பெயரைத்தான். திரைப்பட சரித்திரத்தில் நமது பெயர் ஆழமாக பதிந்திருக்க வேண்டும் என்று எண்ணுவதில் தவறில்லையே!

நடிப்பும் நடனமும் தெரிந்த நான் இந்தத் திரையுலகில் நிரந்தர இடத்தை மட்டுமல்ல, நீங்காத புகழ் கிடைக்கும் சிறந்த பாத்திரங்களில் நடித்து எனது பெயரை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எனது இலட்சியம் அதுதான்.

ஆனால் இதுவரை அந்த இலட்சியம் நிறைவேறவில்லை. அதேசமயம் மறக்க முடியாத கதாபாத்திரம் ஒன்று இதுவரை எனக்குக் கிடைக்கவில்லை. இதை நினைத்து நான் கவலைப்படுவது உண்டு.

நம்பிக்கைதான் வாழ்வின் முதற்படி. இன்று கிடைக்காத அந்த மாதிரியான பாத்திரங்கள் நாளை கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அதற்காக நான் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறேன்.

இதுவரை வெளிவந்த படங்களில் எனது திறமையின் இருபத்தைந்து சதவீதம்தான் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அளவிற்காவது நான் புகழ் பெற்றவளாக இருக்கிறேனே என்ற ஆறுதலுடன், எனது இலட்சியத்தை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

தினசரி சினிமா

# சுதந்திர தேர்தல் கோரி பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம்

## இராணுவச் சட்ட வாபஸால் பயன் எதுவும் இல்லையாம்

இஸ்லாமபாத், டிச. 26

சுதந்திரமான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோரி, பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

எதிர்க்கட்சிகள் கூட்டணி, ஜனநாயக மீட்பு இயக்கம் ஆகியன சேர்ந்து இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றன.

சில தினங்களில் இராணுவச் சட்டத்தை விலக்கும் உத்தரவை ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் பிறப்பிக்க உள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சமயத்தில்தான் இந்த ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

''இராணுவச் சட்டம் விலக்கப்படுவது பெரிதான விஷயம் அல்ல. சுதந்திரமான தேர்தல் ஒன்று நடத்தப்படவேண்டும்'' என்று எதிர்க்கட்சிகள் கூட்டணி, ஜனநாயக மீட்பு இயக்கம் ஆகியவை கோரி உள்ளன.

இதனிடையில் பாகிஸ்தான் சிற்பி காயிதே மில்லத் ஜின்னாவின் பிறந்த தினத்தையொட்டி பாகிஸ்தான் ஜனாதிபதி பேசினார்.

ஜின்னாவின் இலட்சியங்களுக்கு ஏற்ப பாகிஸ்தானைக் கட்டி எழுப்பி வருவதாக ஜனாதிபதி ஸியா குறிப்பிட்டார்.

இந்த நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான அப்துல் ரஹ்மான், ஜின்னாவின் பிறந்த தினத்தை ஜனாதிபதி ஸியா தனது சொந்த நலனுக்குப் பாவிப்பதாகக் குற்றஞ் சாட்டினார்.

எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து, பொலிஸார் 200 பேரைக் கைது செய்தனர். சில அரசியல் கட்சித் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். வேறு சில அரசியல் தலைவர்கள் தலைமறைவாகி விட்டனர்.

### சித்திரவதை தடுப்பு ஒப்பந்தம்

ஐ.நா. டிச, 26

சித்திரவதைத் தடுப்பு ஒப்பந்தத்தில் ரஷ்யாவும் ஆஸ்திரேலியாவும் கையெழுத்திட்டன.

1984இல் ஐ.நா விஞல் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைச்சாதனத்தில் இந்த சித்திரவதைத் தடுப்பு அம்சமும் அடங்கியுள்ளது.

இந்த உடன்பாட்டில் 40 நாடுகள் கையெழுத்து இட்டுள்ளன.

### பேச்சுவார்த்தை

அபுதாபி, டிச. 26

கருத்து வேற்றுமைகளை அகற்றுவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சிரியாவும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் ஈடுபட்டுள்ளன.

## தினமும் 60 சிகரெட் புகைத்தவர்

### இறந்த பின் தாக்கலான வழக்கு தள்ளுபடி

வாஷிங்டன், டிச 26

ஒரு நாளைக்கு 60 சிகரெட். இப்படி 50 வருடங்களாகப் புகைத்து அதனால் இறந்தார் பிரேக்லின் என்ற அமெரிக்கர்.

இப்போது அவரின் உறவினர்கள், 10லட்சம் டாலர் நஷ்டஈடு கோரி, சம்பந்தப்பட்ட சிகரெட் உற்பத்திக் கம்பெனி மீது தொடர்ந்த வழக்கு ஒன்றை அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் ஒன்று, திங்கட்கிழமை தள்ளுபடி செய்தது.

சம்பந்தப்பட்ட சிகரெட் கம்பெனி தயாரித்த சிகரெட்டைப் புகைத்ததால் இருதயம் சுவாசப்பை பாதிக்கப்பட்டு பிரேக்லின் இறந்தார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஜூரர்கள் தீர்ப்பளித்தனர்.

இவ் வழக்கு விசாரணை 5 வாரங்கள் நடந்தது. இதுபோன்று இன்னும் 45 நஷ்டஈடு கோரும் வழக்குகள் விசாரணைக்கு வர உள்ளன.

வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதில் இருந்து மந்தநிலையில் அமெரிக்க சிகரெட் கம்பனிகளின் பங்கு மார்க்கெட் இருந்தது.

நஷ்டஈடு கோரிக்கை தோல்வி கண்டதைத் தொடர்ந்து பங்கு மார்க்கெட் உயர்ந்திருக்கிறது.

### கொசு ஒழிப்புக்கு உயிரியல் முறை

மாஸ்கோ. டிச 26

மத்திய ஆசியக் குடியரசான கஜாக்ஸ்தானிலுள்ள இலி ஆற்றின் வெள்ளம் நிறைந்த நிலங்களிலிருந்து ஏராளமான கொசுக்கள் மறைந்து விட்டன.

இக்குடியரசின் உயிரியலாளர்களால் மண்ணிலும் நீரிலுமிருந்து பிரித்தெடுக்கபபட்ட நுண்ணுயிர்களால் இந்தக் கொசுக்கள் ஒழிக்கப்பட்டன.

இந்த நுண்ணுயிர்களால் பிற உயிரினங்களுக்குத் தீங்கேதும் ஏற்படாது.

பிரான்ஸ், தாய்லாந்து, பர்மா மற்றும் பிறநாடுகளின் உயிரியல் ஆய்வு கூடங்களால் கூட்டுமுறையில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

இயற்கையைப் பாதுகாக்கும் உயிரியல் முறைகளை வளர்ப்பதில் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை சோவியத் விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர்.

## ருடோல் ஹெஸ் விடுதலைக்கு

### ரஷ்யா முட்டுக்கட்டை

பொன், டிச. 26

44 ஆண்டுகளாக மேற்கு பெர்லின் சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள ருடோல் ஹெஸ் என்பவரை விடுதலை செய்யும் முயற்சிகளை ரஷ்யா நிராகரித்துள்ளது.

ஜெர்மன் சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரின் உதவியாளராக ஹெஸ் விளங்கி வந்தார்.

ஹிட்லர் ஆட்சி முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, ருடோல் ஹெஸ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

44 ஆண்டுகளாக சிறையில் இருந்து வரும் ஹெஸ்ஸுக்கு இப்பொழுது வயது 92.

ருடோல் ஹெஸ் வைக்கப்பட்டுள்ள சிறையை பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பாதுகாப்புப் படைவீரர் காவல் காக்கின்றனர்.

ஹெஸ்ஸை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்க, ரஷ்யா மறுத்து வருகின்றது.

# வெளி உலகில்

## இஸ்ரவேலை அங்கீகரிக்க அரபாத்துக்கு காலக்கெடு

### எகிப்திய ஜனாதிபதி முபாரக் விடுத்தார்

வாஷிங்டன், டிச. 26

இஸ்ரவேலை இரண்டு மாதங்களுக்கு இடையில் பலஸ்தீன விடுதலை இயக்கம் அங்கீகரிக்க வேண்டும்.

தவறினால் பலஸ்தீன் விடுதலை இயக்கத் தலைவர் அரபாத் இல்லாமலேயே மத்திய கிழக்கு சம்பந்தமான சமரச நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இப்படி எகிப்திய ஜனாதிபதி ஜனாப். ஹோஸ்னி முபாரக் காலக்கெடு விதித்து உள்ளார்.

அமெரிக்காவின் தேசிய ஒளிபரப்பு நிலையம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே எகிப்திய ஜனாதிபதி மேற்கண்ட காலக்கெடுவை பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்துக்கு விடுத்தார்.

இஸ்ரவேல் என்ற ஒரு நாடு உள்ளதை, ஐ. நா. தீர்மானங்களுக்கு இணங்க பலஸ்தீன விடுதலை இயக்கம் முதலில் அங்கீகரிக்க வேண்டும்.

அப்படி அங்கீகரிக்கப் படாவிட்டால் மத்திய கிழக்கு சமரசம் குறித்து சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தும் முயற்சியில் ஜோர்தான் மன்னர் ஈடுபடுவது மிகவும் கஷ்டமாகும்.

இரண்டு மாதங்களுக்கு இடையில் அரபாத் தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தெளிவுபடுத்தத் தவறினால் ஜோர்தான் மன்னர் வேறு வழியைத்தான் நாடுவார்.

இப்படி ஜனாதிபதி முபாரக் சொன்னார்.

### போதை வஸ்து தின்ற கரடி

ஜோர்ஜியா, டிச, 26

கரடி ஒன்று போதை வஸ்து தின்று உயிரை விட்டது. இது ஜோர்ஜியாவில் இடம் பெற்றது.

போதை வஸ்து கடத்தல்காரர் ஒருவர் விமானமூலம் கொண்டு சென்ற 34 கிலோ எடையுள்ள கொகெயின் போதைவஸ்து பார்சல், மலைப்பிரதேசத்தை அண்டியுள்ள காட்டினுள் வீசப்பட்டது.

அந்த போதைவஸ்துவைச் சாப்பிட்டதால் அக்கரடி இறந்துகிடக்கக் காணப்பட்டது.

அப்போதைவஸ்து இருந்தபை, அக்கரடியின் துகில் கிடக்கக் காணப்பட்டது.

### திருட்டு

நாகர்கோவில், டிச. 27

அல்வாய் அதிசய விநாயகர் ஆலயத்தின் உள்ளே இருந்த உண்டியல் நடுநிசியில் உடைக்கப்பட்டுப் பெருந்தொகையான பணம் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. மேலும் ஆலயத்திலிருந்து சுவர் மணிக்கூடு மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் யாவும் களவாடப்பட்டுள்ளன. இப்பகுதி மக்கள் அண்மைக்காலமாக கோயில்களில் நடைபெறும் களவுகளைக் கண்டித்து இவற்றைப் போக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கின்றனர்.

மக்கள் முகம்

### பாராட்டு விழா

நல்லூர், டிச. 27

நல்லூர் ஒய்வூதியர் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு. ஏ. எம். இராஜேந்திரனின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தினால் நடத்தப்பட்ட அப்பாராட்டு விழாவில் திரு இராஜேந்திரனின் சேவைகளைப் பாராட்டி வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், சட்டத்



தரணி எஸ் ஆர். கனகநாயகம், தொழில் அதிபர் சிவசர்மவள்ளல் திரு. க. கனகராசா ஆகியோர் பேசினர்.

வைபவம் இளைப்பாறிய அஞ்சல் அதிபர் திரு. க. நாகநாதன் தலைமையில் அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

### கிராம சேவையாளர்

நாகர்கோவில், டிச 27

முள்ளியான் பகுதி மக்களின் நீண்டகால வேண்டுகோளுக்கிணங்க கிராம சேவை அதிகாரியாக திரு எஸ். பி இராசேந்திரம் நியமிக்கப்பட்டார்.

## உற்பத்தியில் உயர்ந்த தரம் குறைந்த விலை வேண்டும்

### உடை தயாரிப்பு கணகாட்சியில் உரை

யாழ்ப்பாணம், டிச. 27

பொருள் உற்பத்தியில் ஈடுபடுவோர் குறைந்த விலை உயர்ந்த தரம் ஆகிய இரண்டுக்கும் இடையே ஆரோக்கியம் வாய்ந்த சமநிலையைக் காணுதல் வேண்டும்.

யாழ் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். சுவாமிநாதன் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் உடை தயாரிப்பு கண்காட்சி விற்பனை ஆகியவற்றை ஞாயிறு காலை ஆரம்பித்து வைத்தார்.

கல்வி அமைச்சின் ஆதரவில் பாடசாலையிலிருந்து விலகிய செயற்திட்ட மாணவிகளின் தயாரிப்புக்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றன.

அங்குரார்ப்பண உரையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரத்தின் தலைமையில் திரு. சுவாமிநாதன் தொடர்ந்து கூறியதாவது:-

எந்த உற்பத்தியும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அதிகமானோருக்கு விமோசனம் அளிக்க வேண்டும்.

உயர் மட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல் தேசியக் கம்பனிகள் ஈடுபடுகின்றன.

ஆனால் இன்றைய தேவையென்ன? ஏழைகள் வாங்கக்கூடிய வகையில் அவர்களுக்கு கட்டுபடியாகும் விலையில் பொருள்கள் உற்பத்தியாக வேண்டும்.

பாரிய கம்பனிகளுடன் போட்டி போடச் சக்தியற்ற சிறிய மட்ட உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பினை வழங்கும் முயற்சிகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்வது அவசியம் — இப்படி அவர் கூறினார்.

''கருவறை தொட்டு கல்லறை வரைக்கும் மனிதனின் குணநலங்களை மேன்மையுறச் செய்யும் சஞ்சீவி கல்வி.

தொழிற் கல்வி பெற்ற மங்கையருக்குச் சமூகத்தில் கிராக்கி உண்டு. சுயதொழில் வாய்ப்பிலேதான் பெண்களின் சுதந்திரம் உண்மையிலே தங்கியுள்ளது''

கண்காட்சியை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் மேற்கண்டவாறு கூறினார்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## வடக்கில் புத்தாண்டில் பாவனையாளர் சம்மேளனம்

### சங்கங்கள் ஏற்கனவே உருவாகின

யாழ்ப்பாணம் டிச. 27

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 194 கிராம சேவகர் பிரிவுகளில் பாவனையாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுண்டிக்குளத்திலும், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைதீவிலும் மட்டும் பாவனையாளர் சங்கங்கள் இன்னும் தெரிவாகவில்லை.

இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள பதினறு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளிலும் பெரும்பாலானவற்றில் பிரதேச பாவனையாளர் சங்கங்கள் உருவாகியுள்ளன.

உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவகர்கள், விசேஷ சேவை அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் இச்சங்கங்களை அமைத்துள்ளது.

கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் உள்ள 194 பாவனையாளர் சங்கங்களையும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் உருவாகும் 16 பிரதேச பாவனையாளர் சங்கங்களையும் இணைத்து மாவட்ட பாவனையாளர் சம்மேளனம் புத்தாண்டில் அமைக்கப்பட உள்ளது.

### ஐ.நா. ஆதரவில் மேற்காசிய மாநாடு

பீகிங், டிச, 26

மேற்காசியப் பிரச்சினை சம்பந்தமாக மாநாடு ஒன்று ஐ. நா ஆதரவில் நடைபெற வேண்டும் என்று அரபு நாடுகள் விடுத்துள்ள கோரிக்கையை சீனா வரவேற்றுள்ளது.

### ஆசிரியர் சதாசிவம் ஓய்வு:

## கல்லூரிக்கும் மாணவருக்கும் இழப்பு

### பிரிவுபசார விழாவில் உரை

வட்டுக்கோட்டை டிச 27

மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் கல்விப் பணி புரிந்த ஆசிரியர் சதாசிவம் ஓய்வு பெறுவது எமது கல்லூரிக்கும் மாணவர்களுக்கும் பேரிழப்பாகும்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. ஆ. சதாசிவம் அவர்களுக்கு நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்திய கல்லூரி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வேலுப்பிள்ளை தொடர்ந்துபேசும்போது கூறியதாவது:-

ஆசிரியர் சதாசிவம் ஏனைய ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். இதனை நாம் மறக்க முடியாது. பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் மணவர்களது - கல்லூரியினது நலன்கருதி வகுப்புக்களை நடத்தினார்.

கற்பித்தற்துறையில் ஆற்றல்மிக்க இவர், ஒழுக்கம், நேர்மை, கடமை உணர்வு நிறைந்தவராக இருந்தார். இது எமது கல்லூரியின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தது.

இவரைப்போன்று ஆசிரியர்கள் அனைவரும் கடமை புரிந்தால் மாணவர்கள் பெரும் பயன் அடைவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆசிரியர்கள் திருமதி ஞானம்பிகை முத்துலிங்கம், திரு. வ கந்தசாமி, திருமதி ஆர். சுப்பிரமணியம், திரு. எஸ். இராமானந்தசிவம், திரு. வ. யோகானந்தசிவம், திரு. என். எஸ். கந்தசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

திரு. ஆ. சதாசிவம் பதிலுரை வழங்கினார். ஆசிரியர் திரு. த. சண்முகசுந்தரம் நன்றி நவின்றார்.

## புல் வெட்டப்பட்டு சுன்னாகம் பஸ் நிலைய பகுதி அழகாக காட்சி தருகிறது

சுன்னாகம், டிச. 27

யாழ்அபிவிருத்திச்சபை சுன்னாகம் அலுவலகம் முன் வளர்ந்திருந்த புல் வெட்டப்பட்டு இப்போது பஸ் நிலையம் அழகாகக் காட்சி தருகிறது.

பஸ் நிலையத்துக்கான மின்சார பல்ப்புகளை மாற்றும் வேலைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். அபிவிருத்திச் சபை சுன்னாகம் அலுவலகத்தின் முன் புல் வளர்ந்து புல்வெளி போல் காணப்படுவதாக கடந்த திங்கட்கிழமை உதயனில் செய்தி வெளிவந்தது தெரிந்ததே.

இச்செய்தியை வாசித்ததும் உடனடியாக புல்லை வெட்டுமாறு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இராமலிங்கம் உத்தரவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அரசாங்கத்தை மாற்றுவதால் பயங்கரவாதப் பிரச்சினையை தீர்க்க முடியாது

### சிங்கள பௌத்த சங்கத் தலைவர்

கொழும்பு, டிச 27

அரசாங்கத்தை மாற்றுவதால் மட்டும் பயங்கரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

அகில இலங்கைச் சிங்கள பௌத்த சங்கத் தலைவர் திரு. எட்மண்ட் பனகொட மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தின் கிளை ஒன்று கொழும்பு கிழக்குப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டது.

அது சம்பந்தமான கூட்டத்தில் பேசுகையில் திரு. பனகொட சொன்னதாவது;

தமிழர் ஒன்றுபட்டு விட்டனர். சிங்களவர் பிளவுபட்டுள்ளனர் தமிழர் ஒன்றுபட்டதால் தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவி திரு. அமிர்தலிங்கத்துக்குப் போனது. அதனைப் பயன்படுத்தி அவர் உலகம் முழுவதும் பிரசாரம் செய்தார்.

தமிழர்கள் இலங்கைத் துரோகிகளாக இருந்த நாடுகளில் தான் அவர் கூடுதல் பிரசாரங்களை மேற்கொண்டார்.

அதன் பலன், உலகம் தமிழருக்காகப் பரிந்து பேசியது. தமிழர் மீது உலகம் அனுதாபம் காட்டியது. சிங்களவர் மீது களங்கம் கற்பிக்கப்பட்டது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசாங்கத்தை நாம் மதிப்போம். பயங்கரவாதத்தை ஒழிக்க நாம் அவர்களுக்கு உதவுவோம்'' — இப்படி திரு. எட்மண்ட் பனகொட கூறினார்.

**உதய சங்கற்பம்**

வஞ்சகம், பொறாமையைக் கைவிடுங்கள்.
மற்றவர்களுக்காக ஒன்றுபட்டு உழைக்கப் பழகுங்கள்
இதுவே இன்று நாட்டின் அத்தியாவசியத் தேவை.

— சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805, 22078
27-12-85 த. பெ. 23

## உயிருக்கு உயிர் வெவ்வேறு தரமுண்டா?

ரயிலுக்கு ஆசனம் பதிவுசெய்வது தலை கீழ்! — இந்தத் தலைப்புடன் ஒரு செய்தியை உதயன் வாசகர்கள் நேற்றுப் படித்திருப்பீர்கள்.

இலங்கை நாட்டில், அரசியல் நிலைமை நெருக்கடியான கட்டத்தில் உள்ளதை எல்லோரும் அறிவோம். அதுபோலவே நிர்வாகத்துறையும் சீர்கெட்டுவிட்டது. மக்களுக்குச் செய்யப்படவேண்டிய அலுவல்கள் சரியாகவும், விரைவாகவும், கவனத்துடனும் செய்யப்படுவது இந்நாளில் வெகு அபூர்வம். அரசாங்க தனியார்துறைகளில் பணி புரிவோரிடம் கடமை உணர்ச்சியும், சேவை மனப்பான்மையும் குன்றிவிட்டது.

மாதம் முடியச் சம்பளத்தை வாங்கிக் கொண்டு காலத்தைத் தள்ளினால் போதும் என்ற மனப்போக்கு மூக்குமுட்ட நிறைந்துவிட்டது. இதுவே நிர்வாக இயந்திரம் மழுங்கிப்போனதற்குப் பிரதான காரணம்.

'இன்டர்சிற்றி' ரயிலுக்கு ஆசனத்தை முன்கூட்டியே பதிவுசெய்தும், 250 மைல் தூரத்தை நின்றுகொண்டுவந்த பயணிகளின் கதையை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

''இன்டர்சிற்றி'' ரயில் கொழும்பில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து மீண்டும் இங்கிருந்து கொழும்பு செல்கிறது. பயணி ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டாலும் சரி, கொழும்பில் இருந்து புறப்பட்டாலும் சரி திரும்பி வருவதற்கும் முன்கூட்டியே ஆசனத்தை அந்த ரயில் நிலையங்களில் பதிவுசெய்துகொள்ளலாம்.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு ஆகிய ரயில் நிலையங்களில் இதற்கு வசதி உண்டு. மூன்று இடங்களிலும் அப்படி ஒரு வசதி இருக்கும்போது ஆசனப் பதிவைச் சரிவரச் செய்வதற்கு ஒரு விதிமுறை, ஒழுங்கு முறை தேவை. அந்த விதிமுறையை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது மூன்று இடங்களுக்கு இடையிலும் உரிய தொடர்பு அவசியம். அத்தகைய ஒரு தொடர்பு இல்லாமையால்தான் யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே ஆசனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் கொழும்பிலும் மீண்டும் புதியவர்களுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.

பணத்தை வாங்கிக் கொண்டு ஆசன வசதி செய்து தருவதாகச் சொல்வது ஓர் ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் மீறப்பட்டால் மேலை நாடுகளில் வழக்குத் தொடர முடியும். இங்குள்ள பொதுமக்கள் அதனைப் பற்றி நினைப்பதில்லை. இரண்டொரு வழக்குகள் தொடரப்பட்டு, பொதுமக்கள் நஷ்டஈடு பெற வாய்ப்பு ஏற்பட்டால் ஊழியர்களும், அரசாங்கமும் பின்னர் நிச்சயம் கவனமாக இருப்பார்கள் அல்லவா?

மக்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு அதற்கேற்ற சேவையைச் சரிவரச் செய்யாத போது பணத்தைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலை நாடுகளில் என்ன, எமக்கு அருகில் இருக்கும் இந்தியாவிலேயே அந்த நடைமுறை உண்டு. தொலைபேசி ஒன்று 30 தினங்களுக்கு மேல் பழுதடைந்து இருப்பின், தொலைபேசிக்குச் செலுத்தப்பட்ட வருடாந்த வைப்புக் கட்டணத்தில் ஒரு பகுதி வாடிக்கையாளருக்குத் திரும்பக் கொடுக்கப்படுகிறது.

ரயில் குறிப்பிட்ட நேரத்தில் போய்ச்சேரத் தவறினால் பிரயாணிக்குக் கட்டணம் திருப்பித் தரப்படுவது ஜப்பானில்.

ஆனால் எங்கள் நாட்டில்...?

அநுராதபுரத்துக்கு அப்பால் வடக்கே வந்து சேவையாற்ற ரயில் ஊழியர்கள் பின்னிற்கிறார்கள். அவர்கள் உயிருக்கு ஆபத்து உண்டு. ஆகையால் அவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அபாய ஆபத்து அலவன்ஸ் (Risk Allowance) வழங்கப் போகிறார்கள். அந்த அலவன்ஸுக்கான பணத்தை வடபகுதி ரயில் பயணிகளிடம் இருந்துதான் கறக்கப் போகிறார்கள்! கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம்.

பயணிகளிடம் அதிக பணம் அறவிட்டு ரயில் ஓடும் அரசாங்கம் பயணிகளுக்கு ஏதாவது நடந்துவிட்டால் என்ன செய்யும்? நஷ்ட ஈடு வழங்குமா?

அதைப்பற்றி நினைக்கவும் மாட்டாது இந்த அரசு. இதற்குத்தான் பெயர் தார்மீகம்.

ரயில் ஊழியரின் உயிருக்கு உள்ள மதிப்பு பயணியின் உயிருக்கு இல்லை. இரண்டும் வெவ்வேறு தரத்தினது என்று நினைக்கிறது போலும் தேசிய அரசாங்கம்.

அரசாங்கமே மக்களை வேறு கண் கொண்டு பார்த்தால் அரசாங்க ஊழியர்கள் எப்படி இருப்பார்கள்!

# ஆதிரை நாளும் அருள் பெறும் ஆருத்திரா தரிசனமும்

[இன்று மார்கழித் திருவாதிரை. இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது].

மாதங்களில் சிறந்தது மார்கழி. இதற்குப் பல சிறப்புக்கள் உண்டு. இம் மாதத்தில்தான் பாவையர்க்குரிய பாவை நோன்பு, வைஷ்ணவருக்குரிய வைகுண்ட ஏகாதசி, கிறிஸ்தவருக்கு நத்தார்எனப் பலவிசேஷ தினங்கள் வருகின்றன. 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்' எனப்படுகின்றது. மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை, ஆண்டாளின் திருப்பாவைஎன்பன பாராயணம் செய்வதும் இந்த மாதத்தில்தான்.

ஆதிரைநாளும் ஆருத்திரா தரிசனமும் அடியார்களுக்கு அருளை அள்ளிவழங்கும் விசேஷமுடையது. மார்கழியில் வைகறையில் துயிலெழுந்து காலைக்கடன் முடித்து நித்திய கருமம் செய்து ஆலயம் சென்று ஆண்டவனைக் கைதொழுது ஆராதித்தால் துன்பங்கள் அகலும். இன்பங்கள் சேரும். திருவெம்பாவை, திருப்பாவை பாராயணம் செய்தல் சைவமக்களின் தலையாய கடனாகும்.

### ஆதிரைச் சிறப்பு

மார்கழித் திருவெம்பாவையும் திருவாதிரை நட்சத்திரமும் கூடிய நாள்கள் மிகவும் புனிதமானவை. சிவபிரானுக்குரிய இத்திருவாதிரை நாளில் இந்திரன் முதலிய தேவர்களும் நாரதர்முதலியமுனிவர்களும் இறைவனின் ஆகாசத்தலமான தில்லைச் சிதம்பரத்திலே குழுமி நிலைத்திருந்து வழிபடுவர். நாற்பத்தெண்ணாயிரம் இருடிகள், சப்த சமுத்திரங்கள், சங்கை முதலாய புனித தீர்த்தங்கள் எல்லாம் சூக்கும வடிவில் அங்கு எழுந்தருளி ஆண்டவனை அருச்சிப்பர்.

ஆதிரை திருநாளுக்கு



முன்வரும் ஒன்பது நாட்களும் கன்னிப்பெண்கள் அதிகாலையிலே எழுந்து தம் தோழிகளின் இல்லங்கள் தோறும் சென்று அவர்களைத் துயிலெழுப்பி ஆறு குளங்களில் நீராடி இறைவழிபாடு இயற்றிப் பாவைநோன்பு நோற்பர். கட்டழகுக் கன்னியர் இப்பாவை நோன்பு நோற்பதன் நோக்கம் யாதெனில் தாங்கள் நல்ல, நற்குண, நற்செய்கை மிக்க கணவன்மாரை அடையவேண்டும் என்பதேயாகும் அத்துடன் நாடு செழிக்க நல்லமழை பெய்யவேண்டும் என்பதாகும். ஆகவே திருவெம்பாவை முக்கியமாகத் திருமணமாகாத கன்னிப்பெண்கள் அனுஷ்டிக்கவேண்டிய விரதமாகும்.

ஆ என்றால் பசு. ருத்திரன் என்றால் சிவன். தரிசனம் என்றால் வழிபாடியற்றுவது. ஆகவே ஆருத்திராதரிசனம் என்பது பஞ்ச கௌவியம் தரும் பசுவையும் பஞ்ச கிருத்தியம் செய்யும் பரமனையும் ஒரே நேரத்தில் வணங்குவதாகும். ஒரு கண்ணாடியை வைத்து அதன்கண்ணே ஆவையும் ஆண்டவனையும் அன்பொழுகக்கண்டு ஆனந்திக்கும் அன்பர்களின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

- இளஞ் சைவப்புலவர் இ. ஸ்ரீதரன் -

### திருவாசகம் எனும் தேன்

இந்தச் சிறப்பானமார்கழி மாதத்துக்கு மற்றொரு முக்கியத்துவமும் உண்டு. தேவாரத் திருமுறைகளை எல்லாம் காப்பிட்டு வைத்துவிட்டு மணிவாசகரின் அருள்வாசகமான திருவாசகத்தையே ஓதவேண்டும் என்று ஒருவழக்கம் நிலவுகின்றது. அந்த முறையில் சைவ ஆலயங்களில் எல்லாம் தேவாரம் படிப்பதை நிறுத்திவிட்டுத் திருவாசகத்தையே பாடுகின்றனர்.

தேன் ஒரு சிறந்த ஔஷதம். அது நோய் தீர்க்கவல்லது. அத்துடன் மருந்தாக உபயோகமாகும் அதேநேரத்தில் தன்னைச் சேர்ந்தபொருள்களையும் கெடவிடாத தன்மை வாய்ந்தது. ஆகவே தானுங்கெடாது தன்னைச் சார்ந்தவர்களையும் கெடவிடாது பாதுகாப்பது திருவாசகமாகிய தேன். அந்தத் தேனைப் பருகுவதற்கு ஆன்மாக்கள் பக்குவப்படவேண்டும்.

இந்த மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலை ஆகும். விடியற்காலைப்பொழுது அமைதியாக ஆனந்தமாக இருக்கும். மன ஒருமைப்பாட்டுக்கு இத்தருணமே சிறந்ததாகும். அதுவும் இந்த ஆதிரை நாளன்று ஆனந்தத் தாண்டவமாடும் அம்பலத்தரசனாகிய தில்லைக் கூத்தனுக்கு அனைத்து அபிஷேகங்களும் நடக்கும். அதி ஆதிரை விரதம் அனுஷ்டிக்கும் அன்பர்களுக்கு கற்கண்டுபோலாகும்.

மார்கழித் திங்களில் வரும திருவெம்பாவை, மானிடப் பிறவியெடுத்த மக்கள் அனைவரும் அனுஷ்டிக்க வேண்டியதொன்றாகும். ஆகவே அந்நாளில் விரதம் இருந்து உமாதேவியார் சமேத சிவலோகநாதனைச் சிந்தித்து நின்று சேவித்து, வந்தித்து வழிபாடியற்றினால் இகபர சௌபாக்கியங்களைத் தவறாது பெறுவர் என்பது ஆன்றோர் முடிபு.

## திருவெம்பாவை

**அன்பர் பணிசெய்ய ஆளாக்க வேண்டுதல்**

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல
மென்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்குமெம்
அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்
றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள்
சேரற்க
எங்கையுனக் கல்லாதெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோர்
எம்பாவாய்.

**பொருள்**

கட்டிளங் கன்னியர் கூட்டத்தின் கைங்கரியப் பிரார்த்தனை இது. 'உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்பது பண்டைக்காலத்தில் ஆதியில் திருமணக்காலத்தில் பெற்றோர் மணமகனை நோக்கிக் கூறிவந்ததாகும்.

இதனை நல்ல உத்தம கணவர்கள் வேண்டும் என்ற கருத்தமைந்த கன்னியர், இறைவனைக் குறித்துச் செய்யும் பிரார்த்தனையில் பயன்படுத்திக்கொள்ளுகின்றார்கள். சிவபெருமானுக்கு அன்பான அடியவர்களாக இல்லாதவர்களை மணந்து கொள்ள நேரிட்டுவிடுமோ என்பது அந்த அழகுக் கன்னியர்களின் அச்சம்.

''இறைவா! நான் ஒருமொழி சொல்கிறேன். கேட்பாயாக. என் அழகிய தனங்கள் உன்னடியவரல்லாதவர் தோள் சேரமாட்டாது. எமது கைகள் எந்நாளும் உனக்கே பணிசெய்தல் வேண்டும். இரவு பகல் எனப் பாராது தொண்டு செய்யும் எமக்கு மேற்கூறியவற்றை நல்குவீராயின் அதுவே எமக்கு விடிவைத்தரும்'' என்று கயல்விழிக் கன்னியர் விண்ணப்பிக்கின்றனர்.

உதயசூரியனை உள்ளத்தில் வழுத்தி உற்சாகமாக நீராடுகின்றார்கள் உத்தமப் பெண்கள்.

**யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்**

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கும் தோற்றமாம்
பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம்
பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர்
எம்பாவாய்.

**பொருள்**

பாட்டுப் பாடியாடிப் பரமனைப் பரவியவண்ணம் பங்கயப் பூம்புனல் ஆடிய பாவையர்கள் இறைவனைப் 'போற்றி' என்று போற்றுகின்றார்கள். எல்லா உயிர்களுக்கும் ஆதியாய், அந்தமாய், தோன்றும் இடமாய் போகங்கள் விளைவிக்கும் இடமாய், முடிவிடமாய் உள்ள திருவடிகள் பிரமனாலும் திருமாலாலும் காணமுடியாத பெருமைவாய்ந்தன. எனினும் அத்திருவடிகள் எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் பொன்னடிகள் என்பதும் இக்கன்னியர் கூற்று. அந்தத் திருவடிகளைப் போற்றுகின்றோம். போற்றி மார்கழி நீராடுவோம் என்று அவர்கள் ஆனந்திக்கின்றார்கள்.

எல்லா உயிர்களும் ஒடுங்குவதற்குக் காரணமாகிய திருவடி என்பதை 'எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்' என்பது உணர்த்தும்.

யாம் உய்வதற்காகவே பாதமலர்களைப் பொன் மலர்கள் என்று கூறுகின்றார். அதனை வணங்கி 'மார்கழி நீராடுவோம்' வாரீர் என அழைத்து நிற்கின்றார்கள் அந்த அழகுக் கன்னியர்.

* * *

ஆன்மாவாகிய பெண்ணானவள் பக்தி எனும் காதலால் பதி என்ற இறைவனைப் பந்த பாசங்களினின்றும் நீங்கி மும்மலங்களும் அற்றுப்போகத் தலைவனாக அடைவதே திருவெம்பாவையின் உட்கருத்தாகும்.

# இனப் படுகொலைகள் அபாயத்தை உலகுக்கு இந்தியா அறிவிக்க வேண்டும்

நீதியான, நிரந்தரத் தீர்வு கிட்டாவிட்டாலும், இடைக்காலத் தீர்வு ஒன்றை, விடுதலை இயக்கங்கள் ஏற்கவேண்டும் என்று விவாதிக்கப்படுகின்றது.

தற்போதைய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஜனநாயக நடைமுறைக்குள் இணைவதன் மூலம் அமைதியான, பலனளிக்கக்கூடிய முறையில் எமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தலாம் என்றும் இதற்கு விளக்கம் கூறப்படுகின்றது.

இது நடைமுறைக்கு சாத்தியமற்றது. ஏனெனில்:

* இலங்கை அரசுதான் இராணுவதீர்வுக்கு முயற்சிக்கின்றது. நாம் அல்ல. அவர்களால்தான் நாம் ஆயுதப்போராட்டத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

* அப்படித்தான்நாட்டின் ஜனநாயக நடைமுறை அரசியலில் இணைந்து கொள்ளச் சம்மதித்தாலும், இலங்கையில் ஜனநாயக நடைமுறை கிடையாது என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்,

* 1972 அரசமைப்புச் சட்டத்தில் இருந்த ஜனநாயகத்துக்கு விரோதமான மதசார்பான அம்சங்களையே 1978 அரசமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தியதும் அல்லாமல், ஜனாதிபதி தலைமையிலான ஆட்சி அமைப்பு என்ற முறையில் அதிகாரங்கள் மத்தியில் குவிப்பதற்கும் வழிவகுத்துள்ளது.

உண்மையிலேயே சர்வாதிகார அரசமைப்பு ஒன்றே இலங்கையில் உள்ளது.

அரசமைப்பில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய அளவுக்கு அதிகாரப்பரவலாக்கல் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

தேசிய அடக்குமுறை, அரச பயங்கரவாதம் அவற்றுக்கு எதிராக நிரந்தரத் தீர்வுகாண நாம் போராடுகிறோம்.

இந்தப் போராட்டம் இந்திய உபகண்டத்தின்

> ஈழம் தேசிய விடுதலை முன்னணி, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜரின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

அமைதி, ஸ்திரம் ஆகியவற்றில் இருந்து பிரிக்க முடியாத அளவு பிணைக்கப்பட்டுள்ளது என்பது எமது அபிப்பிராயம்.

இந்தக் கண்டத்தின் சமூகமுன்னேற்றம், ஜனநாயகம், அமைதி, அணிசேராக்கொள்கை, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவற்றை, இப்பிரதேச அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தியா தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று முன்னணி நம்புகின்றது.

தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்களை அழிப்பது தமிழர்களை சுதந்திரம், சுயமரியாதை, கௌரவம் சமாதானம் வேண்டி அரசியல் ரீதியிலோ அல்லது இராணுவரீதியிலோபோராட முடியாத அனாதைகளாக்கும் செயலாகும்.

இத்தகைய எந்த நடவடிக்கைக்கும் ஈழம் தேசிய விடுதலை முன்னணி பங்குதாரராக இருக்க முடியாது. எமது இந்த அவலநிலைமையை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்.

* இலங்கை அரசின் உண்மையான எண்ணத்தையும் எமது மக்கள் 'இனப்படுகொலை' ஒன்றை எதிர்பார்த்து இருக்கும்அபாய நிலையையும் இந்தியா உலகுக்கு அறிவிக்க வேண்டும்.

* சொந்த தேச நலனுக்காக பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண இந்தியா விரும்பினால், நாம் எம்மை அரசியல, இராணுவ ரீதியில் பலப்படுத்திக் கொள்ளவேண்டும், அப்பொழுதுதான் நாம் பலமான நிலையில் இருந்து பேச்சுவார்த்தை நடத்த முடியும். பலவீனமான நிலையில் இருந்து பேச்சுவார்த்தை நடத்த முடியாது.

* சர்வதேச ரீதியில் அரசியல் ராஜதந்திர மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தவேண்டி ஈழம் தமிழர்களின் சட்டபூர்வமான ஏகப்பிரதிநிதி என்ற நிலைக்கு எம் முன்னணியை இந்தியா வளர்க்கவேண்டியது முக்கியம்.

(முற்றும்)

### 3 சக்கர வாகன லைசென்ஸ் சலுகை

யாழ்ப்பாணம், டிச.27

மூன்று சக்கர மோட்டார் வாகனங்களுக்கு வருடாந்த லைசென்ஸ் எடுப்பதற்கு, அந்த வாகனம் ஓடக்கூடிய நிலையில் உள்ளதா என்பதை நிரூபிக்கும் அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் .எம். எச். முஹம்மது இது சம்பந்தமான உத்தரவு ஒன்றை திங்கட்கிழமை பிறப்பித்தார்.

இதற்கு முன்னர் மூன்று சக்கர வாகனங்களுக்கு, ஓடக்கூடிய நிலைபற்றிய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டால் தான் லைசென்ஸ் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.



**பொய்யாமொழி**

**குறள்:**
சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

**பொருள்:**
அறம் சிறப்பையும் அளிக்கும்; செல்வத்தையும் அளிக்கும். ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தைவிட நன்மையானது வேறு யாது?

## பரந்தன் சந்தியில் சூடுபட்டவர் விடுவிக்கப்பட்டார்

நல்லூர், டிச. 27

நத்தார் தினத்தன்று பரந்தன் ரயில் நிலையச் சந்தியில் கைதுசெய்யப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த மார்க்கண்டு துரைரத்தினம்(வயது20) நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

பரந்தன் ரயில் நிலையச் சந்தியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின்போது காயமடைந்த இவரை ஆயுதப்படையினர் அழைத்துச் சென்றிருந்தனர்.

மேசன் வேலைக்குப் போய்விட்டு வரும் வழியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் இவருக்கு ஏற்பட்டது.

சீருடையினர் இவரைக் கைதுசெய்து தங்களுடன் அழைத்துச் சென்று முகாமில் சிகிச்சை அளித்தனர். அங்கு கிறிஸ்மஸ் கேக் தரப்பட்டது.

பின்னர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இவரை சேர்த்துவிட்டு மீண்டும் வந்து அழைத்துச் சென்றனர்.

அதன்பின்பு மீண்டும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அவர்கள் இவரைக் கொண்டு வந்து சேர்த்தனர். அம்புலன்ஸ் மூலம் இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார்.

இவருக்கு காலின் குதியில் காயம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு ஜேர்மன் உடனடிப் பயணம்
முன்கூட்டி பதிவு செய்தவர்கள்
உடனடியாக எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்
RAJEEVAN TRAVELS
42, Clock Tower Road, Jaffna
T' Phone: 23665
மற்றவர்கள் பாஸ்போர்ட்டுடனும்,
6 புகைப்படத்துடனும்
உடன் தொடர்புகொள்ளுங்கள்.

உதயன்
27 - 12 - 1985

அவுஸ்திரேலியா பயண ஒழுங்கு
பாஸ்போர்ட்டுடன் 6 புகைப்படத்துடன்
உடனடியாகப் பதிவு செய்துகொள்ளுங்கள்.
RAJEEVAN TRAVELS
42, Clock Tower Road, Jaffna.
T' Phone: 23(65
மற்றும் பாஸ்போர்ட், பொண்ட்,
விசா, பிரயாண காசோலை
ஆகியன செய்து கொடுக்கப்படும்.

# தஹநாவுக்கு பிக்கு சவால்!

## சபையில் கூறியதை வைத்து போட்டியிட எம். பி. பதவியை ராஜினமாச் செய்யத் தயாரா?

கொழும்பு, டிச. 27
தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வடக்கு, கிழக்கிற்கு தனியான நாடாளுமன்றம் அமைக்க வேண்டும் என்று காலி எம். பி. திரு. டபிள்யூ. தஹநாயக்கா கூறியிருக்கிறார்.

தமது பதவியை இராஜினமாச் செய்துவிட்டு இந்தக் கோரிக்கையை முன்வைத்து காலித் தொகுதியில் மீண்டும் போட்டியிட அவர் தயாரா?

அம்பாறையைச் சேர்ந்த வண. இந்திரதாஸ தேரோ இப்படி சவால் விடுக்கிறார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது;- காலி எம். பியின் ஆலோசனையைப் பார்க்கும்போது பௌத்த சிங்கள மக்கள் தாம் பிறந்த மண்ணிலேயே அடிமைகளாகப் போகின்றார்கள் என்ற அச்சமும் பீதியும் ஏற்படுகிறது.

அவரது பேச்சிலிருந்து அவர் சிங்கள மக்களுக்கு துரோகம் இழைக்க விரும்புகிறார் என்பது தெரிகிறது.

நாமும் இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்புகிறோம். ஆனால் அதற்காக நாட்டைப் பிரித்து அதிகாரத்தைப் பகிர்வதற்கு இணங்க மாட்டோம்.

இப்படி அவர் தெரிவிக்கார்.

## வித்தாரம்

என்னடா தம்பி முரளி! கடிதமும் கையுமா வாறாய். ஏதாவது வேலைக்கு அப்பிளிக்கேஷன் போட்டனியே. ஏதோ மறுமொழி வந்திருக்காக்கும். அப்பிடியே!

அட அது அப்ப உள்ளூர் கடிதம் எண்டு சொல்லு இப்ப ஒரே கிராமத்திலை இருந்து கொண்டே அடுத்த வீட்டுக்காரருக்கும் கடிதம் போட்டுத்தான் கலியாண வீட்டுக்கு அழைக்கினம், முந்தின காலங்கள் மாதிரி ஊன உறவுகள் எங்கே இருக்கு!

அது கதைக்கக் கன நேரம் போகும் இன்னொரு நாளைக்குச் சொல்லுறன்

உனக்கு எப்பிடியும் கவன்மேந்திலிருந்து ஒரு கடிதம் வரும். நான் என்ன சாத்திரம் பாத்தனான் எண்டு நினைக்கிறியோ?

இருந்து பார் இன்னும் இரண்டொரு கிழமையில உனக்கு மட்டுமில்லை உன்னைப்போலை இளைஞர்களுக்கு எல்லாம் அரசாங்கக் கடிதம் வரப்போகுது.

என்னடா புதிர் விடுகிறாய் எண்டு யோசிக்கிறாய் போலை. விஷயத்தை வெளிச்சமாய்ச் சொல்லுறன் கேளேன்.

உங்களைப் போல தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கம் விரைவிலை ஒரு புத்தகத்தை இலவசமாக அனுப்பி வைக்கப்போகுதாம அந்தப்புத்தகத்தை அச்சிடுற வேலை அரசாங்க சார்புடைய அச்சக நிறுவனம் ஒண்டிலை இப்போ மும்மரமாய்நடக்குதாம்.

அது என்ன புத்தகம் தெரியுமே. தமிழ் இளைஞர்களாகிய நீங்கள் இதுவரை படித்திராத கதை ஒண்டு அதில அடங்கியிருக்குதாம் எண்டு கேள்வி.

தமிழ் இளைஞர்களே! இளைஞர்களே!! நீங்கள் பயங்கரவாதத்திலை ஈடுபடாதீர்கள். உங்களுக்குப் பிரச்சினை இருந்தால் சொல்லுங்கள் நாங்கள் நயமாகத் தீர்த்து வைக்கிறோம். பயங்கரவாதம் பொல்லாதது. உங்கள் எதிர்காலத்தைக் கருத்தில் வைத்து ஆயுதங்களைக் கீழே வையுங்கள்.-

இப்படி இன்னும் பல கதையளெல்லாம் அந்தப் புத்தகத்திலை தாளிச்சிருக்கினமாம்.

புத்தகம் வந்தா அதிலை இருக்கிற முழுச் சரக்கையும் பார்க்கலாமதானே.

எங்கடை பெடியளும் புத்தகம் அடிக்கிறாங்கள், நோட்டீஸ் அடிக்கிறாங்கள், போஸ்டர் அடிக்கிறாங்கள். தாங்களும் ஒண்டை அடிச்சுவிட்டுப் பாத்தா என்ன எண்டு ஒரு நப்பாசை வந்திட்டுது போலை. சரி அரசாங்கத்துக்கும் காசைச் செலவழிக்க ஒரு வழி வேணும்தானே. விட்டுத்தள்ளு!

* * *

கதையிக்கை கதையாய் இன்னொண்டும் இருக்கு!

நேற்றைக்குக் காலையிலை யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டுக்கை பெரிய விபத்து ஒண்டு நடக்க நல்ல காலம்.

போயா எண்டாலும் நல்ல சனக் கூட்டம் அப்பா! குண்டு, சூடு எண்டு பயப்பிடுகிற சனம் இப்ப வெளிக்கிட்டுத் திரியிறதெண்டா கணக்கில்லை.

ஆஸ்பத்திரி அது இது எண்டு தேவைக்கு வெளிக்கிடுறதுதான். பயந்து கொண்டிருந்தாக் காரியம் நடக்குமே. ஆனால் சும்மா ரவுண் உலாத்துப் போடுறவைதான் அதிகம்.

அப்படி வந்தவையா— தான் இருக்க வேணும் பஸ் ஸ்டாண்டிலை காலை அடிபட நல்ல காலம்.

அதிசயம் ஒண்டும் இல்லை. இப்ப எங்கடை யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்ட் மெயின் வீதி மாதிரி. அதுக்குள்ளை "சீற்றிபி" பஸ்ஸுகள் நிக்கிறது வலு குறைவு. மினி பஸ்ஸுகள்தான் கூட.

பஸ் ஸ்டாண்டுக்குள்ளாலை பெடியள் மட்டுமில்லை பெட்டையளும் தான் மண், விண் தெரியாமல் சைக்கிளுகளிலை நேஸ் ஓடுதுகள்.

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், ஓட்டோ ரிக்ஷோ எண்டு எல்லாம் ஆஸ்பத்திரி றோட்டிலை இருந்து மின்சார நிலைய வீதிக்கும், இங்கிருந்து அங்குமாக கடந்து போறதுக்கு பஸ் ஸ்டாண்ட் தான் "ஷோர்ட் கட் டாம்!"

பாவம் ஆஸ்பத்திரிக்கு வாற வயசுபோனதுகள், சுகமில்லாததுகள், குழந்தையள் எல்லாம் வாகனக்காரரட்டை விண்கூவல் போக்குவரத்துக்கு இடம் விட்டுக் குடுக்கிறதுக்கு படுகிறபாடு.

சின்னமழை வந்தாலும் போதும். "சீற்றிபி" ஒவ்விஸுக்குப் பக்கத்திலை உடனை ரெடிமேட் குளம் வந்திடுது. சும்மா சொல்லக் கூடாது இப்பிடியான சாதனையைச் செய்யிறதிலை மட்டும் எங்கடை யாழ்ப்பாணத்தாரை ஆரும் அசைக்கேலாது!




## அரச ஊழியருக்கு ரூ.500 விசேட முற்பணம்

அச்சுவேலி, டிச. 27
அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விசேஷ வங்கி முற்பணத்துக்குப் பதில் விசேஷ முற்பணமாக ரூபா 500 வருடத் தொடக்கத்தில் வழங்கப்படவுள்ளது.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கடந்த காலத்தில் வருடத் தொடக்கத்தில் விசேஷ வங்கி முற்பணமாக 300 ரூபா வழங்கப்பட்டு வந்தது.

இது அடுத்த வருடம் தொடக்கம் நிறுத்தப்பட்டு விசேஷ முற்பணமாக 500 ரூபா வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சு சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளது.

1986 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ம் திகதிக்கு முன்னர் இந்த விசேஷ முற்பணக் கொடுப்பனவுகள் அனைத்தும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும்—

அதற்குப்பின்பு விசேஷ முற்பணக் கொடுப்பனவு வழங்கக் கூடாது என்றும்—

500 ரூபா முற்பணமும் 10 மாதங்களில (3 ரூபா வட்டியுடன் சேர்த்து) மாதாந்தம் 53 ரூபா வீதம் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டும் எனவும் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் இருவருக்கு மின்கம்ப தண்டனை

மட்டக்களப்பு, டிச. 27
மட்டக்களப்பில் மேலும் இருவருக்கு மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டது.

வியாழக்கிழமை காலை ரயில் நிலைய சந்தியிலுள்ள மின்கம்பமொன்றில் கட்டப்பட்ட நிலையில் பொலீஸாரால் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இறந்தவர்களில் ஒருவர் ஊறணி வாசியான வி. சுமதிபால (30 வயது).

மற்றவர் அடையாளம் காணப்படவில்லை.

## எலிகள் தற்கொலை!

ஜெருசலம், டிச. 26
எலிப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எலிகளை தற்கொலை செய்து கொண்டன.

இஸ்ரவேல் வானொலி இப்படி அறிவித்தது.

கோலான் மலைப்பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. அப்பிரதேசத்தில் எலிப் பெருக்கம் அதிகமாம்.

பெருக்கத்தைக் கட்டுப்படுத்த மலை உச்சியில் இருந்து குதித்து ஆயிரக்கணக்கான வயல் எலிகள் தற்கொலை செய்து கொண்டன.

நிபுணர்களின் அறிக்கைகளை ஆதாரம் காட்டி இஸ்ரவேல் வானொலி இச்செய்தியை ஒலிபரப்பியது.

## ரூபவாஹினி

27-12-85
மாலை
5-00 — செய்திகள்
5-05 — ஸ்கூபிடூ (கார்ட்டூன் தொடர்)
5-30 — மலரும் அரும்புகள் (குழந்தைகள் - தமிழ்)
6-00 — விவரணம்
6-30 — செய்திகள் (தமிழ்)
6-55 — சிவ தாண்டவம் (தமிழ்)
7-25 — ஸ்வர ரங்கா
8-00 — செய்திகள் (சிங்களம்)
8 30 — சலன் மிஹிர (இசை)
9-00 — செய்திகள் (ஆங்கிலம்)
9-20 — டேற்லைன் (நடப்பு விவகாரம்)
9-50 — ஆங்கிலப்படம்
11-45 — ஒளிபரப்புமுடிவு

## சிங்களவரின் மோட்டார் சைக்கிள் கடத்தல்

திருகோணமலை, டிச. 27
அன்புவழிபுரம் பகுதியில் சிங்களவர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது.

பீரிஸ் என்பவர் தனது மோட்டார் சைக்கிளை வீட்டுக்கு வெளியில் வைத்துவிட்டு, சகோதரியின் வீட்டுக்குப்போனார்.

திரும்புகையில் இனந்தெரியாத நபர்கள் இரண்டு பேரைச் சந்தித்தார். மோட்டார் சைக்கிளைத் தரும்படி அவர்கள் கேட்டனர். பீரிஸ் மறுத்தார். துப்பாக்கியை அவர்கள் நீட்டிக் கேட்கவே பீரிஸ் மோட்டார் சைக்கிளைக் கொடுத்து விட்டார்.

இது சம்பந்தமாக பொலீஸில் பீரிஸ் முறையிட்டார்.

போராளிகள் தான் இதனைக் கடத்தியிருக்கலாம் என்று பொலீஸ் வட்டாரங்கள் கூறின.

வட மாநில

## கல்வி திணைக்களத்தில் உயரதிகாரிகள் மாற்றம்

அச்சுவேலி, டிச, 27
வடமாநிலக் கல்வித் திணைக்களத்தில் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர் மட்டத்தில் அடுத்த வருடத் தொடக்கத்தில் பெரிய அளவிலான மாற்றம் ஏற்படவுள்ளது.

கல்வித் திணைக்களத்தின் பிரதம கல்வியதிகாரியாகக் கடமைபுரியும் திரு. வி. சபாநாயகம் எல்லைப் பிரதேச தமிழ் மாவட்டம் ஒன்றுக்கு கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுடன் இடம் மாறிச் செல்லவுள்ளார்.

இவரது இடத்திற்கு தற்பொழுது உடற்பயிற்சிக்குப் பொறுப்பான கல்வி அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. வி. தங்கராசா பதவி உயர்வுடன் நியமிக்கப்படவுள்ளார்.

அண்மையில் கல்விச் சேவைத் தரம் 3க்கு பதவி உயர்வு பெற்ற காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்த அதிபர் ஒருவர் கல்வியதிகாரியாக கல்வித் திணைக்களத்தில் பதவி ஏற்கலாம்.

தொடர்ச்சியாக பல வருடங்கள் கடமையாற்றிய வட்டாரக் கல்வியதிகாரிகளிடையேயும் குறிப்பிடத்தக்களவுக்கு இடமாற்றங்கள் ஏற்படவுள்ளதாக அறியப்படுகிறது.

உத்தியோகத்தர் மட்டத்தில் ஆசிரியர் நிர்வாகப் பிரிவில் மிக முக்கியமான கடமைகளை நிறைவேற்றிவந்த திரு. எமிலியாம்பிள்ளை, சம்பளக் கிளையில் கடமை புரியும் ஜனாப ஜலீல், மற்றும் ஜனாப் ஹமீட், திரு. தேவமதுரம் உட்பட ஒன்பது பேர் வேறு கல்வி மாவட்டங்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் இடமாற்றப்படவுள்ளார்கள்.

## சின்னத்தம்பி சிரார்த்த தினம்

வட்டுக்கோட்டை, டிச 27
அகில உலக அருள் நெறிமன்றம் நடத்தும் முதலியார் செ. சின்னத்தம்பியின் முதலாவது ஆண்டு சிரார்த்த தினக் கருத்தரங்கு சங்கானை பட்டினசபை நூல் நிலைய மண்டபத்தில் மன்ற உபதலைவர் திரு. சோ. க. வேலாயுதர் தலைமையில் நாளை 28 ம் திகதி சனிக்கிழமை பி. ப. 3 மணி அளவில் நடைபெறும்.

சங்கானை நிகரை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. ஆ. ஞானசேகரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. க அருணசலம், யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. கா. சந்திரராசா, வித்துவான் மு. சபாரத்தினம், ஈழத்துச் சிவானந்தன், திரு. வி. கே. சுப்பிரமணியம் ஆகியோர் முதலியார் செ. சின்னத்தம்பியின் சேவைகள் பற்றி உரையாற்றுவார்கள்.

## மறியல் போராட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 27
அடகு வைத்தோர் சங்கத்தினால் இன்று மக்கள் வங்கிக் கிளைகளுக்கு முன்னால் நடத்தப்படவிருந்த மறியல் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

மக்கள் வங்கி வட பகுதி பிராந்திய முகாமையாளர் திரு. க. கணசமூர்த்தி அடகு வைத்தோர் சங்கத்துடன் தொடர்பு கொண்டதையடுத்து மறியல் ஒத்திவைக்கப்பட்டது.

கண்காணிப்புக் குழு உறுப்பினர் திரு. கா. சிவத்தம்பி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் அடகு நகை விநியோகம் பற்றி இன்று பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண விசாரணை

நல்லூர், டிச. 27
நேற்று முன்தினம் பரந்தன் ரயில் நிலையச் சந்தியில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மரணமான 20 வயதுடைய தர்மலிங்கம் கஜேந்திரனின் மரண விசாரணை அவசரகாலச் சட்டத்தின் கீழ் நேற்று யாழ். வைத்தியசாலையில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனையின் அறிக்கையை கொழும்பு உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பும்படியும், சடலத்தை உறவினரிடம் கையளிக்கும்படியும் யாழ் பதில் நீதவான் திரு. வரதராசன் உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை யாழ். உதவி வைத்திய அதிகாரி திரு. சி. கே. பரிமேழழகர் நடத்தினார்.

இரண்டாவது டெஸ்ட்

## ஆஸி தடுமாறுகிறது

### இந்திய சுருள் பந்து வீச்சாளர்களிடம்

மெல்போர்ன், டிச. 26
இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய சுருள் பந்து வீச்சாளர்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஆஸ்திரேலிய அணி தடுமாறுகிறது.

சுருள் பந்து வீச்சாளர்களிடம் நேற்று 8 விக்கெட்டுக்களை பறிகொடுத்த ஆஸி அணி 210 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது

நேற்று மெல்போர்னில் ஆட்டம் ஆரம்பமானது. ஆரம்பத்தில் பூவா தலையா சுண்டிப் பார்த்ததில் இந்திய அணித் தலைவர் வெற்றி பெற்றார். அவர் ஆஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அனுமதித்தார்.

முதலாவது டெஸ்டில் பங்குபற்றிய இந்திய அணியிலிருந்து சேட்டன் சர்மா நீக்கப்பட்டிருக்கிறார். தமிழ் இளைஞரான சிவராமகிருஷ்ணன் அணியில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

நேற்று ஆட்டம் ஆரம்பமானது முதல் இந்திய அணியின் கை ஓங்கியிருந்தது எதிர்பார்த்தபடி ஆஸி அணியினால் ஓட்டங்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆஸி தரப்பில் ஜியோவ் மாஸ் 30, டேவிட் குகஸ் 42, ரே பிறையிட் 28, கிரேக் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்திய அணியின் உபதலைவர் ரவிசாஸ்திரி 64 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைவீழ்த்தினர். ஷிவ்லால் யாதவ், சிவராமகிருஷ்ணன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்கள் இவர்கள் மூவரும் சுருள் பந்து வீச்சாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டம் 30 நிமிடங்கள் முன்னதாகவே இடை நிறுத்தப்பட்டது. இரண்டாம் நாள் ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறும்.

## விளையாட்டரங்கு

7 பேர் அணிகளுக்கிடையில்

## புதுவருட உதைபந்தாட்டம் சென் மேரீஸ் கழகம் ஏற்பாடு

### நாளை நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 27
நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு நாவாந்துறை சென் மேரீஸ் கழகம் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான கண்காட்சி உதைபந்தாட்டம் ஒன்றை நாளை (சனிக்கிழமை) நடத்த இருக்கிறது.

மூன்று நேரடி மோதல்களில் யாழ்ப்பாணத்தில் அதிசிறந்த ஆறு அணிகள் பங்குபற்றுகின்றன.

நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் சுற்றுப்போட்டி சாம்பியன்களான கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிறீன்பீல்ட் கழக அணி விளையாடும்.

மாலை 3.40 மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் சென் மேரீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதும்.

மூன்றாவது ஆட்டம் மாலை 5.20 மணிக்கு நடைபெறும். இந்த ஆட்டத்தில் சென். நிக்கிலஸ் அணி யாழ். முஸ்லிம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆடும்.

இந்த மூன்று ஆட்டங்களுக்கும் பிரதம விருந்தினர்களாக வண. பிதா. .எம். இம்மனுவல் அடிகள், வண. பிதா. ஏ. ஸ்ரீபன் மரியதாஸ், அருள் சகோதரர் செபஸ்ரி நிக்கலஸ் ஆகியோர் பங்கு பற்றுவர்.

இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை சென். மேரீஸ் கழகச் செயலாளர் திரு. நீ. அருளானந்தம் கவனித்து வருகிறார்.

## சைவப் புலவர் சங்க பரீட்சை; விண்ணப்ப திகதி ஜன: 31

வட்டுக்கோட்டை, டிச. 27
அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் அகில இலங்கை ரீதியில் 1986-ஆம்ஆண்டுநடத்தவிருக்கும் இளம் சைவப் புலவர், சைவப் புலவர் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 31-ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

சைவப் பெருமக்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க இப்பரீட்சைகளின் விண்ணப்ப திகதி ஜனவரி மாதம் 31-ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இளஞ் சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றுவோர் பரீட்சைக்கட்டணமாக ரூபா. 25 உம், சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றுவோர் ரூபா 35 உம் காசுக் கட்டளையாக அல்லது அஞ்சற் கட்டளையாக விண்ணப்பத்துடன் இணைத்து காரியதரசி அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம், 125, அரசடி வீதி, யாழ்ப்பாணம என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும.

பரீட்சைச் செயலாளர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் இதனைத் தெரிவித்தார்.

## இணைப்பு அதிகாரிக்கு விசேஷ பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 27
வவுனியா இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன பயிற்சி பெறுவதற்காக இந்தியா சென்றுள்ளார்.

இந்தியாவில் உள்ள பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரியில் இவர் பயிற்சி பெறுவார்.

கேணல் இங்லி ஜெயவர்த்தன வவுனியா இணைப்பு அதிகாரியாக இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

## அஸ்வமேத யாகம் இங்கு நடக்கிறது!

கொழும்பு, டிச. 27
அஸ்வமேத யாகம் கொழும்பில் இன்று ஆரம்பமாகின்றது.

கொழும்பு பழைய கதிரேசன் மண்டபத்தில் இந்த யாகம் ஒரு மண்டலம் (40 தினங்கள்) நடைபெறும்.

யாகத்துக்கு என்று வெளிநாட்டில் இருந்து வெண் குதிரை ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வந்த சைவ, வைஷ்ண சிவாசாரியார்களும் இலங்கையில்உள்ள சிவாசாரியார்களும் இந்த யாகத்தை நடத்துவர்.

யாகத்திற்கான கால் கோள்விழா, வியாழக்கிழமை நடந்தது. பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரையும் பல பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டனர்

## கோயிலில் படையினர் நடத்திய சோதனை

யாழ்ப்பாணம், டிச. 27
கடந்த வெள்ளிக்கிழமை பொலிகண்டியில் உள்ள ஊறணி ஸ்ரீ கந்தவனக் கோயில் ஆயுதப் படையினரால் சோதனை இடப்பட்டது.

பொலிகண்டி கிராம சேவையாளர் திரு. ஜெயவீரசிங்கமும், ஆயுதப்படையினருடன் சென்று இருந்தார்.

ஆலயம், களஞ்சிய அறை சகலதும் சோதனை இடப்பட்டன 2 பாஸ்போட்டுக்கள், 3 படங்கள், 160 ரூபா பணம் இரண்டு தங்கச்சங்கிலி ஆகியன ஆயுதப்படையினரால் கொண்டு செல்லப்பட்டன.

பின்னர் இப்பொருள்கள் மேலதிக அரசாங்க அதிபர் மூலம் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

திரு. பஞ்சலிங்கம், ஆலயக் குருக்கள், குருக்களின் மனைவி ஆகியோரை செயலகத்துக்கு வரவழைத்து பொருள்களை அவர்களிடம் நேரடியாக ஒப்படைத்தார்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷ்ஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியிட்ட திகதி 27—12—1985.